THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை அபுதாபி

"அவருக்குள் வேரூன்றி, அவர்மேல் கட்டப்பட்டவர்களாயும், விசுவாசத்தில் உறுதிப்பட்டவர்களாயும், இருங்கள்."
கொலோசேயர் 2:7

தூது
நற்செய்தி துணுக்குகள்

ஜுலை & ஆகஸ்டு – 2026
(மடல் - 26) செய்தி –7

# பொருளடக்கம்

| | |
|---|---|
| ஆயர் மடல் | 1 |
| ஆயரம்மா மடல் | 3 |
| பெண்கள் பகுதி | 5 |
| Children's Corner | 9 |
| வேத வினாக்கள் | 22 |
| கோதுமை மணி | 25 |
| துணுக்குகள் | 27 |
| ஆலய பக்கம் | 29 |

# நிலையான விசுவாசத்தை நோக்கி

கிறிஸ்துவுக்குள் அன்புக்குரிய திருச்சபை குடும்பமே! இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் எனது அன்பின் வாழ்த்துக்கள்!

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒரு நாள் பயணம் அல்ல, அது நமது வாழ்வின் இறுதிவரை தொடரும் விசுவாசப் பயணமாகும். இந்தப் பயணத்தில் பலவிதமான சோதனைகள், போராட்டங்கள், எதிர்பார்ப்புகள் மற்றும் ஆசீர்வாதங்கள் நம்மைச் சந்திக்கின்றன. இவற்றின் மத்தியில் அசையாமல் நிற்கும் நிலையான விசுவாசம் ஒரே நாளில் உருவாகுவதில்லை. தேவனுடைய கிருபையாலும், அவரோடு கொண்டுள்ள உறவின் மூலமாகவும் அது வளர்ச்சியடைகிறது. எனவே, நிலையான விசுவாசத்தை நோக்கி பயணிக்கும் நாம்,

**1. வார்த்தையில் வேரூன்ற வேண்டும்**

நிலையான விசுவாசத்தின் அடித்தளம் தேவனுடைய வார்த்தையாகும். ஆழமான வேர்களைக் கொண்ட மரம் புயல்களிலும் அசையாமல் நிற்பதைப்போல, தேவனுடைய வார்த்தையை தியானித்து அதன்படி வாழ்கிறவர்கள் வாழ்க்கையின் சோதனைகளிலும் நிலைத்திருப்பார்கள். இயேசுகிறிஸ்து வனாந்தரத்தில் சாத்தானின் சோதனைகளை எதிர்கொண்டபோது, "எழுதியிருக்கிறது" என்ற வார்த்தையினால் வெற்றி பெற்றார் (மத்தேயு 4:1-11). ஆகையால், தேவனுடைய வார்த்தையில் வேரூன்றிய வாழ்க்கை விசுவாசத்தை உறுதிப்படுத்தி, தேவனுடைய சித்தத்தில் நிலைத்திருக்கச் செய்கிறது (சங்கீதம் 1:2-3).

**2. ஜெபத்தில் விழித்திருக்க வேண்டும்**

ஜெபம் என்பது தேவனோடு கொண்டுள்ள உயிருள்ள உறவாகும். ஜெபத்தில் நிலைத்திருக்கும் வாழ்க்கை விசுவாசத்தை வலிமைப்படுத்தி, சோதனைகளில் வெற்றியடையச் செய்கிறது. தானியேல் தினமும் ஜெபத்தில் உறுதியாய் இருந்ததால், சிங்கக்குகையிலும் தேவன் அவரைக் காத்தார் (தானியேல் 6:10-23). அதுபோல, ஜெபத்தில் விழித்திருந்து தேவனுடைய சித்தத்தைத் தேடுகிறவர்கள் உலகத்தின் கவலைகளால் சோர்ந்து போகாமல், தேவனுடைய சமாதானத்திலும், வல்லமையிலும் வளர்கிறார்கள். ஆகவே, இடைவிடாத ஜெப வாழ்க்கை நிலையான விசுவாசத்தின் இரகசியமாகும் (1 தெசலோனிக்கேயர் 5:17).

**3. கீழ்ப்படிதலில் வளர வேண்டும்**

உண்மையான விசுவாசம் செயல்படும் விசுவாசமாகும். தேவனுடைய வார்த்தையைக் கேட்பது மட்டுமல்ல, அதன்படி நடப்பதும் அவசியமாகும். ஆபிரகாம்

தேவனுடைய அழைப்புக்குக் கீழ்ப்படிந்து அறியாத தேசத்திற்குப் புறப்பட்டுச் சென்றபோது, அவரது விசுவாசம் செயலின் மூலம் வெளிப்பட்டது (எபிரெயர் 11:8). அதுபோல, தேவனுடைய சித்தத்திற்கு தங்களை ஒப்புக்கொடுத்து கீழ்ப்படிந்து வாழ்கிறவர்கள் ஆவிக்குரிய முதிர்ச்சியையும், தேவனுடைய ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கிறார்கள். ஆகவே, கீழ்ப்படிதலில் வளர்வதே நிலையான விசுவாசத்தின் கனியாகும் (யாக்கோபு 2:17). நாம் நிலையான விசுவாசத்தை நோக்கிப் பயணிக்க வேண்டுமானால், வார்த்தையில் வேரூன்றி, ஜெபத்தில் விழித்திருந்து, கீழ்ப்படிதலில் வளர வேண்டும். இவைகள் மூன்றும் நமது விசுவாச வாழ்க்கையின் அடித்தளம், வல்லமை மற்றும் கனியாக இருந்து, இறுதிவரை கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்க உதவுசெய்கின்றது. கடவுள் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : esp.rgt@gmail.com*

**இவண்**
**கிறிஸ்துவின் திருபணிவிடையாளன்**
**அருள்திரு.S.பிரபுதாஸ்**

## செப்டம்பர் மாத தலைப்பு

## ஒன்றிப்பில் வளருவோம்

## *Let us grow together in unity*

# கண்ணீரிலிருந்து கனி பெற்ற ராகேலின் ஜெபம்

ஆதியாகமம் 30:1-2, 22-24

குடும்பத்தில் அன்பைப் பெற்றவளாக இருந்தாலும், ராகேலின் உள்ளத்தில் ஒரு குறையிருந்தது. யாக்கோபின் அன்பைப் பெற்றிருந்தாலும், தாய்மையின் ஆசீர்வாதம் தாமதிக்கப்பட்டிருந்தது. தன் சகோதரி லேயாள் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டதைப் பார்த்தபோது, ராகேலின் இதயம் வேதனையால் நிரம்பியது. மனிதர்களால் நிரப்ப முடியாத வெற்றிடத்தை தேவன் மட்டுமே நிரப்ப முடியும் என்பதை அவள் அறிந்தாள். கண்ணீரால் நனைந்த இரவுகள் இருந்தன. பதில் இல்லாத நாட்கள் இருந்தன. காத்திருப்பின் பாரம் இருந்தது. மனிதர்கள் மறந்துபோனாலும், தேவன் மறந்துவிடுவதில்லை. மனிதர்களின் நேரம் தாமதிக்கலாம் ஆனால் தேவனுடைய நேரம் தவறுவதில்லை.

"தேவன் ராகேலை நினைத்தருளினார் அவளுக்குத் தேவன் செவிகொடுத்து, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்." (ஆதி. 30:22).

### 1. ஜெபத்தின் தாக்கம்

ராகேலின் ஜெபம் அவளுடைய வாழ்க்கையை மாற்றியது. மனவேதனையை மகிழ்ச்சியாக மாற்றியது. அவமானத்தை ஆசீர்வாதமாக மாற்றியது. பல ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த கர்ப்பம், தேவனுடைய கிருபையால் திறக்கப்பட்டது. யோசேப்பு என்ற மகன் பிறந்தான். யோசேப்பின் மூலம் ஒரு தேசம் பஞ்சத்திலிருந்து காப்பாற்றப்பட்டது. ஒரு பெண்ணின் ஜெபம், ஒரு குடும்பத்தின் எதிர்காலத் தையும், ஒரு தேசத்தின் வரலாற்றை மாற்றியது. "நான் துயரப்gLfpw நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன் நீர் என்னைக் கேட்டருளுவீர்." சங்கீதம் 86:7. ஜெபம் நம்முடைய சூழ்நிலையை மட்டும் மாற்றுவதில்லை, வருங்கால சந்ததியையும் ஆசீர்வதிக்கிறது.

### 2. ஜெபத்தின் மேன்மை

ராகேலின் ஜெபம் ஒரு ஆசீர்வாதத்திற்காக மட்டுமல்ல, அது தேவனை சார்ந்திருக்கும் ஒரு வாழ்க்கையின் வெளிப்பாடாக இருந்தது. மனிதர்களின் ஆறுதலால் முடியாததை, தேவனுடைய கிருபை செய்து முடித்தது. அவள் காத்திருந்தாள்,

நம்பினாள், ஒருபோதும் தேவனை மறக்கவில்லை, ஜெபத்தின் மேன்மை என்னவென்றால், நம்முடைய பலவீனத்தை தேவனுடைய வல்லமையோடு இணைக்கிறது. “கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்..” - ஏரேமியா 17:7. ஜெபம் என்பது தேவனிடம் வேண்டுவது மட்டுமல்ல, தேவனுடைய நேரத்தை நம்பி காத்திருப்பதுமாகும்.

**3. ஜெபத்தின் வல்லமை**

“தேவன் ராகேலை நினைத்தருளினார்” என்ற ஒரு வசனம், ஜெபத்தின் வல்லமையை வெளிப்படுத்துகிறது. தேவன் மறந்துவிட்டார் என்று தோன்றிய நேரத்திலும், அவர் செயல்பட்டுக் கொண்டிருந்தார். அமைதியாகயிருந்தாலும், அவர் செயலற்றவராக இருக்கவில்லை. ஜெபம் மூடிய கதவுகளைத் திறக்கும். ஜெபம் கண்ணீரை சாட்சியாக மாற்றும். ஜெபம் அவமானத்தை மகிமையாக மாற்றும். “நீதிமான் செய்யும் ஊக்கமான விண்ணப்பம் மிகவும் வல்லமையுள்ளது.” - யாக்கேயு 5:16 ராகேலின் ஜெபம் யோசேப்பைத் தந்தது. யோசேப்பு எகிப்தின் ஆளுநரானான். அவனின் மூலம் குடும்பம் காப்பாற்றப்பட்டது. அதன் மூலம் தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் தொடர்ந்தது. ராகேலின் வாழ்க்கை நமக்குச் சொல்லும் உண்மை: தேவன் தாமதிக்கலாம் ஆனால் மறந்துவிடமாட்டார். கண்ணீரோடு விதைக்கிறவர்கள் சந்தோஷத்தோடு அறுப்பார்கள் - சங். 126:5, ஜெபத்தில் காத்திருப்பவன் வெட்கப்படுவதில்லை. (ஏசா. 49:23). இன்று உங்களுடைய கண்ணீருக்கு பதில் இல்லாதது போல் தோன்றலாம். ஆனால் ராகேலின் தேவன் இன்னும் உயிரோடிருக்கிறார். காத்திருப்பதை நிறுத்தாதீர்கள், ஜெபிப்பதை விட்டுவிடாதீர்கள். தேவன் நினைத்தருளும் நாள் வரும்போது, கண்ணீர் பாடலாக மாறும், வேதனை சாட்சியாக மாறும் , காத்திருப்பு ஆசீர்வாதமாக மாறும்!


இறைபணியில்
**ஆ. ஜெஸிந்தா பிரபுதாஸ்**
ஆயர் அம்மா

## யோசேப்பின் நிலையான விசுவாசம்

விசுவாச வாழ்க்கை என்பது ஆசீர்வாதங்களோடு கூட சோதனைகள், காத்திருத்தல், அநீதிகள் மற்றும் கண்ணீரின் வழியாகவும் செல்லும் ஒரு வித்தியாசமான வாழ்க்கையாகும். ஆனால் இவற்றின் மத்தியிலும் தேவனுடைய வாக்குறுதியை உறுதியாய் பற்றிக்கொண்டு நிலைத்திருப்பதே **நிலையான விசுவாசம்** ஆகும். இதற்கு வேதாகமத்தில் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர் யோசேப்பு.

யோசேப்பின் வாழ்க்கையில், **சூழ்நிலைகள் மாறின. ஆனால் யோசேப்பின் தேவன் மாறவில்லை. அதனால் யோசேப்பின் விசுவாசமும் மாறவில்லை.**

### 1. வெறுத்து தள்ளப்பட்டபோதும் விசுவாசத்தை இழக்கவில்லை



யோசேப்பு தன் சகோதரர்களால் வெறுக்கப்பட்டார். அவரைக் கொலை செய்யத் திட்டமிட்டு, பின்னர் அடிமையாக விற்றுவிட்டனர் (ஆதியாகமம் 37). மனித பார்வையில் இது ஒரு வாழ்க்கையின் முடிவாகத் தோன்றியது. ஆனால் யோசேப்பு தேவனைப் பற்றிய நம்பிக்கையை இழக்கவில்லை. அவருடைய கனவுகள் தாமதமானதே தவிர, தேவனுடைய திட்டம் தோல்வியடையவில்லை.

- நம்முடைய வாழ்க்கையிலும் மனிதர்கள் நம்மை நிராகரிக்கலாம். வாழ்க்கையே முடிந்து போனது போல் தோன்றலாம். ஆனால் தேவன் நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை.

### 2. சோதனையின் மத்தியில் தெய்வபயம்

போத்திபாரின் வீட்டில், அவருடைய மனைவியால் யோசேப்புக்கு மிகப்பெரிய சோதனை வந்தது. ஆனால் அவர், **"நான் தேவனுக்கு விரோதமாக இப்படிப்பட்ட பெரிய பாவத்தைச் செய்வது எப்படி? "** (ஆதியாகமம் 39:9) என்று கூறி பாவத்தை விட்டு விலகி ஓடினார்.

- நிலையான விசுவாசம் என்பது சபையில் மட்டுமல்ல, யாரும் பார்க்காத இடங்களிலும் தேவனுக்குப் பயந்து வாழ்வதாகும்.

### 3. அநீதியிலும் தேவனை நம்பி பொறுமையைக் காத்தார்



யோசேப்பு குற்றமற்றவராக இருந்தும் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் முறையிடவில்லை. தேவனை விட்டுவிடவும் இல்லை. சிறையில்கூட உண்மையுடன் பணியாற்றி சிறை அதிகாரியின் கண்களில் தயவு பெற்றார். சிறைச்சாலைத் தலைவன் சிறைச்சாலையில் வைக்கப்பட்ட யாவரையும்

யோசேப்பின் கையிலே ஒப்புவித்தான். இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பொறுமையுடன் காத்திருந்தார்.

- சில நேரங்களில் நீதிமான்களுக்கும் அநீதி நடக்கலாம். ஆனால் தேவன் கூடவே இருந்து சரியான நேரத்தில் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். நிலையான விசுவாசம் என்பது தேவனுடைய நேரத்தை நம்பும் மனப்பான்மையாகும்.

**4. உயர்பதவியிலும் தேவனுக்கு மகிமையைக் கொடுத்தார்**



எகிப்தின் பிரதம மந்திரியாக உயர்த்தப்பட்டபோது, யோசேப்பு தனது ஞானத்தையோ திறமையையோ குறித்து பெருமைபடவில்லை. பார்வோனிடம், **“அது என்னால் அல்ல தேவனே சமாதானமான பதிலை அருளுவார்"** (ஆதியாகமம் 41:16) என்று கூறினார்.

- உண்மையான விசுவாசம் சோதனையில் மட்டுமல்ல, வெற்றியிலும் வெளிப்படுகிறது.

**5. மன்னிக்கும் விசுவாசம்**



யோசேப்பின் சகோதரர்கள் மீண்டும் அவர்முன் வந்தபோது, பழிவாங்க அவருக்கு முழு அதிகாரமும் இருந்தது. ஆனால் அவர் கூறிய வார்த்தைகள் விசுவாசத்தின் உறுதியை வெளிப்படுத்துகின்றன. **”நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள். தேவனோ அதையே நன்மையாக முடியப்பண்ணினார்."** (ஆதியாகமம் 50:20)

- நிலையான விசுவாசம் என்பது கடந்தகால காயங்களில் வாழ்வது அல்ல. தேவனுடைய நோக்கத்தைப் புரிந்துகொண்டு மன்னிப்பதைத் தேர்ந்தெடுப்பதாகும்.

யோசேப்பின் வாழ்க்கை ஏற்றத் தாழ்வுகள் நிறைந்ததாக இருந்தாலும், அவரது விசுவாசம் நிலையானதாக இருந்தது. குழியிலிருந்து அரண்மனைக்குச் சென்ற அவரது பயணம், மனித முயற்சியால் அல்ல, தேவனை உறுதியாகப் பற்றிக்கொண்ட விசுவாசத்தால் நிறைவேறியது.

இன்று நாமும் பல்வேறு சோதனைகளையும் காத்திருப்புகளையும் சந்திக்கலாம். ஆனால் யோசேப்பைப் போல தேவனுடைய வாக்குறுதியில் நிலைத்திருந்தால், அவர் நம்முடைய வாழ்க்கையையும் தமது மகிமைக்காக வழிநடத்துவார்.

**”நிலையான விசுவாசம் என்பது சூழ்நிலைகள் மாறாத வாழ்க்கை அல்ல. சூழ்நிலைகள் மாறினாலும் தேவன் மாறாதவர் என்பதை நம்பி வாழும் வாழ்க்கையாகும்."**

**ஜெபசீலி ஆசீர்**




## விசுவாச கண்களுடன் தன் பிள்ளையைப் பார்த்த தாய்—யோகெபேத்
## யாத்திராகமம் 2:1-11

விசுவாச கண்கள் தேவனது பக்கம் நின்று அவர் பார்க்கிற வண்ணம் பார்க்கிறது. அப்படிப்பட்ட கண்கள் உள்ள பெற்றோர் பிள்ளைகளுடன் செயல்படும் விதமே வித்தியாசமானது. சூழ்நிலைகள் அவர்களை சேதப்படுத்துவதில்லை. அப்படிப்பட்ட விசுவாசம் கொண்டவள்தான் மோசேயின் தாய் யோகெபேத். அவளது விசுவாசத்தால் மோசே காப்பாற்றப்பட்டான். விசுவாசப் பட்டியலிலும் இடம் பெற்றார்கள்.

**யோகெபேத்**

கொடிய பஞ்சம் கானானை சந்தித்த காலத்தில் உயிர் பிழைக்க யோசேப்பினால் எகிப்துக்கு கொண்டு வரப்பட்ட யாக்கோபின் குடும்பத்தாரில் லேவியும் ஒருவன். லேவிக்கு தனது முதிர்வயதில் எகிப்தில் வைத்து பிறந்த மகள்தான் யோகெபெத் (கர்த்தர் மகிமையானவர்). அவள் கணவர் பெயர் அம்ராம். இத்தம்பதியினருக்கு பிறந்த பிள்ளைகள் மிரியாமும் ஆரோனும்.

**யோகெபேத்தின் விசுவாச வாழ்வு**

அடிமைத்தனம், கொடிய வேலை, ஜீவனும் கசப்பாகும் சூழ்நிலை. இவற்றால் இஸ்ரவேலர் தவித்துக்கொண்டிருந்தனர். பிறக்கும் எல்லா ஆண் குழந்தைகளையும் முதலைகள் நிறைந்த நைல் நதியில் போட வேண்டும் என்ற புதிய சட்டத்தை எகிப்தின் அரசன் பிறப்பித்தான். இந்த இக்கட்டான சூழ்நிலையில் பிறந்த மோசேயை அவன் பெற்றோர் அழகுள்ளது என்று கண்டு மூன்று மாதம் ஒளித்து வைத்தனர். தேவன் பக்கம் நின்று யோகெபேத் பிள்ளையைப் பார்த்தாள்.

**பயத்தை புறம்பாக்கும் விசுவாசம்:**

நாணற்பெட்டிய எடுத்து அதற்கு பிசினும், கீலும் பூசி, அதிலே பிள்ளையைக் கிடத்தி நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள் (யாத்.2:3). இந்த விசுவாசம் பயத்தைப் புறம்பாக்கினது.

**கீழ்ப்படியும் விசுவாசம்:**

யோகெபேத் ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்த விதம் வித்தியாசமானது. சிறிது விசுவாசம் கலந்த தைரியத்துடனும், கலையுணர்வுடன் கூடிய செயல்பாட்டினாலும் செயல்பட்டாள்.

**தொடரும் விசுவாசம்:**

தனது குழந்தையை கவனிக்க தன் மகளை வைத்தாள். மிரியாம் தூரத்தில் நின்று பிள்ளைக்கு என்ன சம்பவிக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்தாள். பார்வோனின் குமாரத்தியின் கண்களில் பிள்ளை பட்டவுடன் அவளருகே பிள்ளை கொண்டு வரப்பட்டது. அப்பொழுது மிரியாம் அருகில் நின்றாள். மிரியாம் தைரியத்துடன் இந்தக் குழந்தையை வளர்க்கும்படி எபிரேய ஸ்திரீகளில் பால் கொடுக்கிற ஒருத்தியை நான் போய் அழைத்துக் கொண்டு வரட்டுமா என்று செயல்பட ஆரம்பித்தாள் இது தொடரும் விசுவாசத்தைக் காட்டுகிறது.

நம்முடைய விசுவாசம் எப்படிப்பட்டது? நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று வேதம் சொல்கிறது. விசுவாசிக்கிறவன் பதறான். விசுவாசக் கண்களோடு கர்த்தர் மேல் நம்பிக்கையாய் இருப்போம்.

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

**ஷர்மிளா ராஜேஷ்**

# CHILDREN'S CORNER

Dear Children,

The theme this July/August is "**TOWARDS STEADFAST FAITH**".




Steadfast faith means trusting God and continuing to follow Him even when life is difficult, confusing, or takes a long time.

It means not giving up on God because we know He is always faithful.

## Key Takeaway Points




**1. Keep Trusting God Even When Things Are Hard** - Sometimes prayers are not answered right away, but God is still working. Pro. 3:5-6 "Trust in the Lord with all your heart and lean not on your own understanding."

**2. Don't Give Up When Problems Come** - Faith grows stronger when we keep following Jesus through challenges. James 1:12 "Blessed is the one who perseveres under trial..."

**3. Stay Connected to Jesus Every Day** - We grow in faith by praying, reading God's Word, and obeying Him. John 15:5 "I am the vine; you are the branches."

**4. Remember God's Faithfulness** - Thinking about how God has helped us in the past gives us courage for today. Ps. 77:11 "I will remember the deeds of the Lord."


**5. Keep Your Eyes on Jesus** - Jesus is our perfect example of faith and endurance. Heb. 12:2 "Fixing our eyes on Jesus, the pioneer and perfecter of faith."





Easy to remember Acronym **S.T.A.N.D.**

**S** – Stay close to Jesus
**T** – Trust God always
**A** – Always pray
**N** – Never give up
**D** – Depend on God's promises

## SAYING IT WITH PICTURES…





He replied, "Because you have so little faith. Truly I tell you, if you have faith as small as a mustard seed, you can say to this mountain, 'Move from here to there,' and it will move. Nothing will be impossible for you." — Matthew 17:20 NIV




We do not want you to become lazy, but to imitate those who through faith and patience inherit what has been promised. — Hebrews 6:12 NIV

## BOOKS OF THE BIBLE #7: Judges




**Author**: Possibly Samuel


**When It Happened**: 1420–1117 BC

**Chapters**: 21

**Key People**: Deborah, Gideon, Samson, Delilah

**Summary**: Israel turned from God. Everyone did what was right in their own eyes, forgetting God's laws.

The book of Judges tells of a cycle that repeated over 300 years and included the Israelites' disobedience and idolatry, God's judgment on the people by allowing neighboring nations to conquer them, the people's repentance and prayer to God for deliverance, and God's forgiveness and compassion to them as He raised up judges to save them.





The people did not learn and continued to return to their sinful ways.

**About God**: God is jealous for His glory and will punish idolatry.

But He is also faithful to His promises, compassionate, and merciful..

## TINY TOTS SECTION

### COLOR IN...



# YOUR FAITH HAS MADE YOU WELL

## Jesus Heals 10 Men

10 sick men called out to Jesus, "Have pity on us!"

Find and (circle) the 10 men's faces.




Enter your SECRET CODE to unlock games @ games.childrensbulletins.com

SECRET CODE PTPMX8


## Jesus healed them all.

Count the healed men. Trace the numbers.




## Only one man came back to praise God and thank Jesus.

Help the man get to Jesus.



## Jesus said, "Your faith has made you well."

Cross out all of the Q's.
Write the remaining letters on the lines below.



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Q | F | Q | A | I | T | Q | H |



____ ____ ____ ____ ____


## It Is Through Faith We Understand That the Universe was Formed by God's Command (Heb. 11: 3).

**Find 12 differences in the 2 pictures below…**



## Moving to a New Land

When God called Abraham to go to a new land and a new home, Abraham had faith in God and obeyed God. Help Abraham find his way to his new home!



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "TOWARDS STEADFAST FAITH"

1. What is Faith? (Hebrews 1:1)

a. Hope in God's Promises. b. Wishful thinking.
c. A feeling. d. Good luck.

2. What does the testing of faith produce? (James 1:3)

a. Fear. b. Pride.
c. Patience. d. Wealth.

3. Who is called the author and finisher of our faith? (Hebrews 12:12)

a. Moses. b. David.
c. Paul. d. Jesus.

4. Who remained faithful despite suffering? (James 5:11)

a. Jonah. b. Job.
c. Saul. d. Achan.

5. Without faith, it is impossible to ___________. (Hebrews 11:6)

a. Serve Others. b. Love others.
c. Please God. d. Hear God's word.

6. Jesus said faith as small as a _____ can move mountains? (Matthew 17:20)

a. Pebble. b. Grain of Sand.
c. Mustard Seed. d. Clover Leaf.

7. The righteous shall live by _____. (Romans 1:17)

a. Wisdom. b. Strength.
c. Faith. d. Riches.

8. Who walked on water toward Jesus by faith? (Matthew 14:29)

a. John. b. Peter.
c. Andrew. d. Philip.

9. Faith comes by hearing the _____. (Romans 10:17)

a. News. b. Law.
c. Word of God. d. Prophets.

10. By faith, Moses chose to suffer with God's _____. (Hebrews 11:24-25)

a. Angels. b. Priests.
c. People. d. Kings.

11. What breastplate protects against the evil one's attacks? (Ephesians 6:16)

a. Truth. b. Faith.
c. Hope. d. Prayer.

12. Let us run the race with perseverance. This teaches _____ faith. (Heb. 12:1-2)?

a. Steadfast b. Doubtful. c. Weak. d. Fearful

# HAVING FAITH, TRUSTING GOD

SUPPORTS COME, FOLLOW ME

Hebrews 11 talks about faithful people who trusted God and followed Him. Match the picture of each person with their story. (Look up the scriptures if you need a hint!)



NOAH (Hebrews 11:7)

MOSES (Hebrews 11:24–29)

SARA (Hebrews 11:11–12)

ABRAHAM (Hebrews 11:8–9)

God told me I would be a mother. Even though I was too old to have children, I had a baby! Now my family is as num-berless as the stars in the sky or sands on the seashore.

God told me to build an ark. Because I obeyed, my family and I were saved from the flood.

God told me to lead the slaves out of Egypt. We crossed the Red Sea on dry ground.

God told me to travel to a new land. I obeyed, even though I didn't know where I was going. I was led to a promised land where I could raise a family.

**Use Hebrews 11:1 to fill in the blanks below:**

"Now _ _ _ _ _ is the substance of things _ _ _ _ _ for, the evidence of things _ _ _  _ _ _ _."

This means that when we have faith, we trust God, even if we can't see the answers right away. Stay faithful!

## Make the Match

Draw a line from each name to the matching description.




By faith, he received God's promises. (Hebrews 11:32)

By faith, she welcomed the Israelite spies. (Hebrews 11:31)

By faith, he built an ark to deliver his family. (Hebrews 11:7)


By faith, he offered God his one and only son. (Hebrews 11:17)

By faith, he chose to suffer with God's people. (Hebrews 11:24)


# Bible People with Great Faith

By Richard Steen Williams










Many people in the Bible showed great faith. To learn about some of them, read the clues, look up the scriptures to identify them, and write their names in the crossword puzzle.

## Across

1. She kept faith in God's promise (see Hebrews 11:11).
2. God chose the __________ people because they were rich in faith (see James 2:5).
3. Her actions showed great faith (see Luke 2:36–37).
5. He kept the faith to the very end (see 2 Timothy 4:7, heading).
7. The Lord prayed that ___________ would keep his faith (see Luke 22:31–32).
11. He offered his sacrifice in good faith (see Hebrews 11:4).


## Down

1. His faith enabled him to do great miracles and wonders (see Acts 6:8).
3. He gave his life for his faith (see Revelation 2:13).
4. Paul's converts were faithfully tended by him (see 1 Corinthians 3:5–6).
6. He was Paul's son in the faith (see 1 Timothy 1:1–2).
8. One of the men whose faith saved him in the fiery furnace (see Daniel 3:28).
9. He was called the man of faith (see Galatians 3:9).
10. ______________ had faith that his father would be healed (see Acts 28:7–8).

**BELIEVE IT OR NOT !!**

**Having Faith in Christ means we completely trust God in every part of our life.**

Stop Doubting and Believe




Then he said to Thomas, "Put your finger here; see my hands. Reach out your hand and put it into my side. Stop doubting and believe."
John 20:27 (NIV)

## PARABLE DECODED #7: FAITH LIKE A MUSTARD SEED





### VIDEO - FAITH LIKE A MUSTARD SEED




### FAITH IN ACTION...

In 1812, a devastating warehouse fire consumed **William Carey's** printing press, destroying years of irreplaceable manuscripts, dictionaries, and Bible translations. Surveying the smoking ruins, Carey did not despair. Instead, he knelt, thanked God for the strength to rebuild, and started over, ultimately improving his work

# FAITH LIKE THE BREASTPLATE OF FAITH AND LOVE




## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

1. The theme for the month of July- August is: ______________________________.
2. The book of Judges has __________ chapters.
3. Heb. 12:2 says ________________________________________________________

   _____________________________________________________________________
4. In ________, a devastating warehouse fire consumed _________________ printing press. Carey did not despair. Instead, he _________, thanked God for the ________________to rebuild, and ______________ over.

**Dear Children, let your Faith grow like a mustard seed.**

**God bless,**
**Mrs. Briliya Jeyaseelan**

## Answers to June Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – "SET YOUR MIND ON THINGS ABOVE"

1. b. Things above.
2. b. Heaven.
3. c. Heaven.
4. c. Minds.
5. c. Pure.
6. c. Jesus.
7. d. Meaningless.
8. c. God's Kingdom.
9. b. Spiritual.
10. a. Eternal.
11. b. Eternal Life.
12. a. God's Word.

## Complete the Short Review Below...

5. The theme for the month of June is: **Set Your Mind on Things Above**.
6. **JOSHUA** wrote the book of Joshua.
7. Phil 4:8 says - **Finally, brothers and sisters, whatever is true, whatever is noble, whatever is right, whatever is pure, whatever is lovely, whatever is admirable—if anything is excellent or praiseworthy—think about such things**.
8. **Bartholomeus Ziegenbalg** was one of the first Protestant missionaries to **South India.** He arrived in the town of **Tarangambadi** in **1706.**






## MEMORY VERSE COMPETITION 2026

This year the Memory Verse Competition will be conducted during usual Junior church Timings. Date to be confirmed later.

**Beginners, Primary** and **Juniors** will need to recite their assigned memory verses, face to face, within the allocated time.

**Inters, Seniors** and **Super seniors** will need to come prepared to write the allotted portion from memory and recite the remaining memory verse portions orally. Time limit will be 1 hour.

### MEMORY VERSE PORTIONS FOR 2026

| SECTIONS | 2026 | | |
|---|---|---|---|
| | Portions | No. of Verses | Allocated Time |
| Beginners A (kg. 1) | Philippians 4:13; Psalms 133 + (New Testament Books) | 4 verses + (NT) | 10 mins. |
| Beginners B (kg. 2) | Psalms 33:1 - 8 +<br>(Old Testament books) | 8 verses + (OT) | 10 mins. |
| Primary A (Gr. 1) | Psalms 119: 1 - 16 | 16 verses | 15 mins. |
| Primary B (Gr. 2) | Psalms 34 | 22 verses | 15 mins. |
| Primary C (Gr. 3) | Proverbs 3:1 - 25 | 25 verses | 15 mins. |
| Juniors (Gr. 4; 5; 6) | Psalms 119: 1- 32 +<br>(Books of the old and new testament) | 32 verses + [OT & NT] | 20 mins. |
| Intermediates<br>(Gr. 7,8) | Psalms 118; Philippians 4 | 52 verses<br>[written - Ps. 118: 1-20] | 1 hr. |
| Seniors (Gr. 9) | Psalms - 34; 31; 91; 131 | 65 verses<br>[written – Ps. 34] | 1 hr. |
| Super Seniors A & B<br>(Gr. 10; 11; 12) | Psalms – 27; 96; 97; 125; 127; 133; 134; 136 +<br>(Books of the Old and New testament) | 81 verses + [OT & NT]<br>[written – Ps. 136] | 1 hr. |




## Marking for Written Memory verse competition will be as follows

- 1 mark will be awarded for every correct and completed verse.
- No marks will be deducted for punctuations.
- 0.1 mark will be deducted for each spelling mistake and missing grammar.
- 0.25 marks will be deducted for every missing key word.
- 0.50 marks will be deducted for every 3 or more words missing (segment of a sentence)
- 1 mark will be deducted if there is no memory verse number, or if the order of the memory verses is interchanged. Partial verses will not be counted.
- Handwriting should be legible. No marks will be awarded, if the correcting teacher is unable to comprehend what is written.
- Final marks will be scored out of 10.

## Criteria for The Competition Awards will be as follows

| Level | Oral recitation | Written Competition |
|---|---|---|
| Outstanding | No prompts | 9.8 - 10 Marks |
| 1st Prize | 1 – 2 prompts | 8 – 9.8 Marks |
| 2nd Prize | 3 – 5 prompts | 6 – 7.9 Marks |
| 3rd Prize | 5 – 10 prompts | 4 – 5.9 Marks |
| Participation | For reciting incomplete no. of verses | Less than 4 Marks |



# வேத வினாக்கள்

## யாத்திராகமம் முழுவதும்

(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1. மோசேயை மறைத்து வளர்த்த தாயின் பெயர் என்ன?
2. மோசேயின் மனைவி யார்?
3. மோசேயின் மாமனாருக்கு வேறு பெயர் என்ன?
4. தேவன் எரிகின்ற முட்செடியில் மோசேக்கு எங்கே தோன்றினார்?
5. மோசே தன் கைத்தடியை தரையில் போட்டபோது அது எதாயிற்று?
6. மோசேயின் சகோதரியான பெண் யார்?
7. பர்வதத்தின் மேல் மோசேயின் கைகளைத் தாங்கிய இருவர் யார்?
8. மோசே நீதிபதிகளை நியமிக்கும்படி ஆலோசனை கூறியவர் யார்?
9. தேவன் பத்துக் கற்பனைகளைக் கொடுத்த மலை எது?
10. ஆண்டவரின் தூதன் எரியும் முட்செடியில் தோன்றிய இடம் எது?
11. பொற்கன்றை வடிவமைத்தவர் யார்?
12. ஆரோனின் இரண்டு மகன்களின் பெயர்கள் என்ன?
13. மோசே பிறந்தபோது அவனை எத்தனை மாதங்கள் மறைத்து வைத்தனர்?
14. பஸ்கா ஆட்டுக்குட்டி எந்த மாதத்தில் ஏற்படுத்தப்பட்டது?
15. பஸ்கா இரவில் இரத்தம் பூசப்பட்ட இடம் எது?
16. செங்கடலைக் கடந்தபின் இஸ்ரவேலர் முதலில் கசப்பான தண்ணீரைக் கண்ட இடம் எது?
17. மன்னா முதலில் எங்கே பொழிந்தது?
18. பாறையிலிருந்து தண்ணீர் வந்த இடம் எது?
19. உடன்படிக்கைப் பெட்டியின் மேல் இருந்த இரு உருவங்கள் என்ன?
20. பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த பொற்குத்துவிளக்கின் கிளைகள் எத்தனை?
21. ஆசரிப்புக்கூடார வேலையை நடத்த நியமிக்கப்பட்ட முக்கிய கலைஞர் யார்?
22. அவருக்கு உதவியவர் யார்?
23. மோசே மலையில் எத்தனை இரவும் பகலும் தங்கியிருந்தார்?
24. மேகஸ்தம்பமும் அக்கினிஸ்தம்பமும் ஜனங்களுக்கு எப்போது வழிகாட்டின?
25. ஆண்டவருடைய மகிமையினால் நிரம்பியதால் மோசேயும் உள்ளே செல்ல முடியாத இடம் எது?

## ஜுன் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | இருப்பிடம் |
|---|---|---|
| 1 | நிம்ரோத் | ஆதியாகமம் 10:9 |
| 2 | ஏனோக்கு | ஆதியாகமம் 5:24 |
| 3 | யோசேப்பின் சகோதரர்கள் | ஆதியாகமம் 37:28 |
| 4 | ஏசா | ஆதியாகமம் 25:31-34 |
| 5 | யாக்கோபு | ஆதியாகமம் 28:12 |
| 6 | ஈசாக்கு | ஆதியாகமம் 21:3,6 |
| 7 | ஆபிரகாம் | ஆதியாகமம் 20:2 |
| 8 | காம் | ஆதியாகமம் 9:22 |
| 9 | யாக்கோபு | ஆதியாகமம் 28:11 |
| 10 | பாபேல் | ஆதியாகமம் 11:4 |
| 11 | ஈசாக்கு | ஆதியாகமம் 26:7 |
| 12 | காயீன் | ஆதியாகமம் 4:10 |
| 13 | யாக்கோபு | ஆதியாகமம் 32:24-28 |
| 14 | ஆதாம் – ஏவாள் | ஆதியாகமம் 3:7 |
| 15 | ரெபேக்காள் | ஆதியாகமம் 27:6–17 |
| 16 | யோசேப்பு | ஆதியாகமம் 37:5-8 |
| 17 | லோத்தின் மனைவி | ஆதியாகமம் 19:26 |
| 18 | நோவா | ஆதியாகமம் 6:14-22 |
| 19 | யாக்கோபு | ஆதியாகமம் 27:15-16 |
| 20 | யோசேப்பு | ஆதியாகமம் 37:31-33 |
| 21 | ஏவாள் | ஆதியாகமம் 3:20 |
| 22 | ஆபிரகாம் | ஆதியாகமம் 12:8 |
| 23 | சாராள் | ஆதியாகமம் 18:12-15 |
| 24 | யோசேப்பு | ஆதியாகமம் 41:39-43 |
| 25 | யோசேப்பு | ஆதியாகமம் 41:14-41 |

குறிப்பு : *அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் எழுதிய விடைத்தாள்களை ஒப்படைக்கவும். தயவுசெய்து WhatsApp மூலம் பதில்களை அனுப்புவதை தவிர்க்கவும்.*

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



## ஜூன் மாத வேத வினாக்களுக்கான பதிலளித்தவர்கள்

1. Mrs. Ajita Ebi
2. Mrs. Adela Ezra
3. Mrs.Desigta Jaison
4. Mr.Emmanuel (Ruwais)
5. Emmanuel Vanya
6. Mrs.Esther Pauline Rani
7. Mrs.Febell Jeevagi Thomas
8. Mrs.Geetha kannan
9. Mrs. Goldina Thatcher
10. Mrs.Helen Sharmila Ray
11. Mrs. Ida Robin
12. Mr.Jeba Jino
13. Mrs.Jasmine Sobha
14. Mrs.Jebaseeli Asir
15. Mrs.Dr. Jenila Gannraj.L
16. Mrs.Jacqulin Rani
17. Mr.Jo Ernast
18. Mrs. Malar Ernast
19. Mr.Merlin Jeba Kinis
20. Mr.Michael
21. Mrs.Nandhini Rajkumar
22. Mrs.Padma Brin
23. Mr.Prawin Durai Sam (Ruwais)
24. Mrs. prija samuel
25. Mrs. Preethi
26. Mrs.Priya Ranjith Kumar
27. Mrs.Persis John
28. Mrs.Peppin Jenson
29. Mr.Raja Guru Sekar
30. Mrs.Sarah Manuel
31. Mr.Salin Robert
32. Mrs.Sheeba Merlin
33. Mrs.Sheeba Herlin
34. Mrs.Sheneegah Stanly
35. Mrs.Sharmila Rajesh
36. Mrs.Selvi George
37. Mrs. Subija Jino
38. Mrs.Sweetilin Frank
39. Mrs. Shajeethe Gracy
40. Mrs. Suni Smila Edwin
41. Mrs.Valentine Sharmila Paul
42. Mrs. Vithya Dinesh

## Children who answered June – 2026 Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Adonia Paul Arun
4. Alton kim Kinis
5. Albern
6. Aleina
7. Andrea kim Kinis
8. Anana Natalie
9. Benson Immanuel Raj
10. Berakah Jessy Rajkumar
11. Brightson Timothy Raj
12. Clement Dave
13. Daniel Vanya (RUWAIS)
14. Defina
15. Diyas Dinesh
16. Effrin
17. Evangelia Sharon
18. Evaniya Sherin
19. Evelyn Loria V
20. Giana Elin
21. Hadriel Adventier
22. Jadon Darius Ruwais]
23. Janey Titus
24. Jaslin Shanna
25. Jaylan Paul Jino
26. Jeffrey Samuel
27. Jen Scudd
28. Jenessa Johnson
29. Jevlyn Ana
30. Jeya Jehosheba Maher
31. Jim Scott
32. Joanna Paul Jino
33. Joha Anit Manuel
34. Johan Sam Manuel
35. Johanan Paul Jino
36. Keren Tessa
37. Kavi yalini
38. Kavin Immanel
39. Kev Shannen P.S(Ruwais)
40. Leona Juliet
41. Leonel I.J. Stalin
42. Liana Erin
43. Linuel I.J. Sherwyn
44. Mishael Wesley
45. Rivqah Deby Rajkumar
46. Selvajesvin (Ruwais)
47. Sherlyn Sana (Ruwais)
48. Starlyne Noble
49. Steffi Priscilla .R



# இயேசுவின் சீடர் தோமா

***இந்தியாவின் அப்போஸ்தலர்***

**சீனாவில் …..**

தோமா இந்தோனேஷியாவிலிருந்து சீனா தேசத்திற்குச் சென்று, அங்குள்ள ஜனங்களுக்கு சுவிசேஷம் அறிவித்தார். அந்த தேசத்தில், சில காலம் கர்த்தருடைய ஊழியத்தை தோமா நிறைவேற்றினார்.

சீனாவில் பல எதிர்ப்புகளை தோமா சந்தித்தாலும், மனம் தளராமல், சிலுவையில் தன்னையே தியாக பலியாக ஒப்புக்கொடுத்து, தனக்காகப் பாடுபட்ட இயேசு கிறிஸ்துவையே, தன் கண்களுக்கு முன்பாக நிறுத்தி ஊழியம் செய்தார். அதன் விளைவாக, அனேகர் இயேசு கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்தனர். தோமா அவர்களை தொடர்ச்சியாக கர்த்தருக்கு நேராக வழி நடத்த, சில போதகர்களையும் ஏற்படுத்தினார்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள், பல விதமான உபத்திரவங்களின் மத்தியில் கடந்து சென்றாலும், விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருந்தனர்.

கி.பி. 6ம் நூற்றாண்டில் தோமா மூலமாக இரட்சிக்கப்பட்டவர்களின் வம்சத்தினரில் இரண்டு போதகர்கள் இந்தியாவிற்கு வந்து சுவிசேஷத்தை அறிவித்துள்ளனர்! கி.பி.635ம் ஆண்டில், சீனாவிலுள்ள ‘டாங்’ ராஜ்யத்தில் கர்த்தரை ஆராதிப்பதற்கும், சுவிசேஷத்தை அறிவிப்பதற்கும் கிறிஸ்தவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது.

இங்கு கண்டெடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டில், 7ம் நூற்றாண்டிலும் கிறிஸ்தவர்கள் இங்கு வாழ்ந்ததற்கான ஒரு சான்று உள்ளது.

கி.பி. 9ம் நூற்றாண்டில், சீனக் கிறிஸ்தவர்கள் பல விதங்களில் துன்புறுத்தப்பட்டனர். கிறிஸ்தவ மதத்திற்கு சீனாவில் தடை விதிக்கப்பட்டது. என்றாலும், விசுவாசத்தில் தளராத இரகசியக் கிறிஸ்தவர்கள் 10ம் நூற்றாண்டிலும் சீனாவில் வாழ்ந்தார்கள்.

விசுவாசத்தினாலே சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள். குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள்.

தோமா சீனாவில் விதைத்த வேத வசனமாகிய விதை, ஒன்று நூறாகப் பலன் கொடுத்தது. பாடுகளின் மத்தியிலும் விசுவாசிகள் கிறிஸ்துவில் நிலைத்து இருந்தார்கள் என்றால் தோமா எந்த அளவிற்கு அவர்களை சத்தியத்திற்குள் வழி நடத்தியிருப்பார் என்பதை அது வெளிப்படுத்துகிறது.

**கேரள மாநில ஊழியங்கள்**

**முசிறி துறைமுகம்**

தோமா சீனாவில் தேவ பணியை நிறைவேற்றிக் கொண்டிருந்தபோது, அவரால் நடைபெற்ற அற்புதங்களை கேள்விபட்ட கேரளாவின் திருவஞ்சிக்குளம் பகுதியை அரசாண்ட அரசன், தன் தேசத்தின் ஜனங்களை நல் வழிப்படுத்த தோமாவை அழைத்தான். அந்த அரசனின் அழைப்பின் பேரில் தோமா கப்பலில் பயணம் செய்து, கி.பி. 52ம் ஆண்டு நவம்பர் 23ம் தேதி மீண்டும் கேரளாவிலுள்ள, மல்லியங்கரா என்கிற தீவுக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்து இரண்டு மைல் தூரமுள்ள முசிறி துறைமுகத்தில் தரை இறங்கினார்.

இத்துறைமுகம் அந்நாட்களில் கேரளாவுக்கும், இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதிக்கும் ஒரு முக்கியமான துறைமுகமாக விளங்கியது. கி.பி.60ல் இத்துறைமுகத்திற்கு வந்த கிரேக்க வியாபாரி ஒருவர், இத்துறைமுகத்தில் நின்ற பல கப்பல்கள் அரேபியாவிற்கும், கிரேக்க நாட்டிற்கும் செல்லத் தயாராக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

**அன்றைய தமிழகமும், கேரளமும்**

தோமா ஊழியம் செய்த காலக் கட்டங்களில் இருந்த தமிழ்நாடு மற்றும் கேரளாவைப் பற்றிய சிறு கண்ணோட்டத்தை இங்கே காண்போம்.

அன்றைய தமிழ் நாட்டையும், கேரளாவையும், சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மன்னர்கள் ஆட்சி செய்தார்கள். தோமாவின் காலங்களில் இப்பகுதி மிகுந்த செல்வ செழிப்புடன் காணப்பட்டது.

இங்கு வசித்த மன்னர்களும், வணிகர்களும், மிளகு, வாசனைப் பொருட்கள், யானைத் தந்தங்கள், முத்து, பவளம், மாணிக்கம், தங்கம், வெள்ளி, பட்டுத் துணிகள் முதலியவற்றை உலகின் பல்வேறு நாடுகளுக்கு கப்பல் மூலமாக ஏற்றுமதி செய்தனர். கி.மு. 3000 முதல், கி.மு.2000 வரை இங்கிருந்து எகிப்து தேசத்திற்கு பருத்தி உடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

கி.மு. 965ல் அரசனான சாலொமோன், தங்கம், விலையுயர்ந்த ஆபரணங்கள், சந்தன மரங்கள், யானைத் தந்தங்கள், குரங்குகள் மற்றும் மயில்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்தார். பாபிலோனின் அரசனான நேபுகாத் நேச்சாரும் தன் அரண்மனையைக் கட்டத் தேவையான தேக்கு மரங்களை எல்லாம் இங்கிருந்துதான் வாங்கினான்.

- **தொடரும்**




**மா மாட்சி கர்த்தர் [பாமாலை 24]**
**(O worship the King all glorious above**

1. **மா மாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம் செய்வோம்**
**வல்லவர் அன்பர் பாடிப் போற்றுவோம்**
**நம் கேடகம் காவல் அனாதியானோர்**
**மகிமையில் வீற்றுத்துதி அணிந்தோர்.**

2. **சர்வ வல்லமை தயை போற்றுவோம்**
**ஒளி தரித்தோர் வானம் சூழ்ந்தோராம்**
**குமுறும் மின் மேகம் கோப ரதமே**
**கொடும் கொண்டல் காற்றிருள் சூழ் பாதையே.**

***கர்த்தாவே, உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும்'. சங் 145:10***

நமது ஆலய ஆராதனைகளில் முதல் பகுதியைப் பொதுவாகத் தெய்வதுதியாக ஆசரிக்கிறோம். ஆராதனை ஆரம்பத்தில் பாடுகிற பாடல்கள், வாசிக்கிற வேதபகுதிகள், ஏறெடுக்கிற ஜெபங்கள் முதலியன ஆண்டவரின் துதியாகவே இருக்கின்றன. நமது பாட்டுப் புத்தகங்களிலும் முதல் பகுதி தெய்வதுதிப் பாடல்களாகவே இருக்கின்றன. சங்கீதப் புத்தகத்தில் கடவுளைத் துதித்துப் பாடுவதற்கேற்ற அநேக சங்கீதங்கள் உண்டு. சங்கீதங்கள் 95-107, 145-150, இதற்கு உதாரணங்களாகும். 'மாமாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம் செய்வோம்' என்னும் பாடல் 104ம் சங்கீதத்தைத் தழுவி, தெய்வ துதிப்பாடலாக எழுதப்பட்டது. இச் சங்கீதத்தில் கடவுளின் மகிமை வானத்திலும் பூமியிலும் நிரம்பியிருத்தல் போற்றப் படுகிறது.

1834ம் ஆண்டு, பம்பாய் நகரத்தில் ஸர் ராபர்ட் கிரான்ட் (Sir Robert Grant) என்பவர் கவர்னராயிருந்தார். இவர் திருமறையை நுட்பமாகப் படிப்பதிலும், திருமறையின் பல மொழிபெயர்ப்புகளை ஒத்துப்பார்ப்பதிலும் தனது ஓய்வு நேரத்தை செலவு செய்தார். ஒருநாள் அவர், வில்லியம் கீத் என்பவரால் 1561ல் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு சங்கீதக் கோர்வையை (Psalter) படித்துக்கொண்டிருக்கும்போது, 104ம் சங்கீதத்தின் மொழிபெயர்ப்பு அவரை அதிகமாகக் கவர்ந்தது. அவர் மூலமொழியில் இச்சங்கீதத்தைப் படித்துக் கடவுளின் சர்வ வல்லமையையும், சர்வ மகிமையையும் விவரிக்கும் ஓர் ஆங்கிலக்

கவி எழுத விரும்பி, உடனே எழுத ஆரம்பித்தார். இதன் விளைவாகக் கிறிஸ்தவ உலகம் பெற்றதுதான், ‘மா மாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம் செய்வோம்’ என்னும் பாடலாகும். இப்பாடல் முதலாவதாக, ‘கிறிஸ்தவ சங்கீதப் பாடல்கள்’ என்னும் புத்தகத்தில் பிக்கர்ஸ்தெத் என்பவரால் வெளியிடப்பட்டுப் பலராலும் பாராட்டப்பட்டது. முதலில் இப்பாடல் புகழ்பெற்ற சங்கீத நிபுணரான ஜோகான் ஹேய்டன் என்பவரால் அமைக்கப்பட்ட ‘Lyons’ என்னும் ராகத்தில் பாடப்பட்டது. ஆனால் நாம் இப்போது வில்லியம் கிராய்ட் என்பவர் எழுதிய ‘Hanover’ என்னும் ராகத்தை இதற்கு உபயோகிக்கிறோம். (இப்பதிவில் இதே சந்தத்தில் அமைந்த பிறிதோர் ராகமான ‘*Old 104th*’ எனும் ராகம் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பாடலை எழுதிய ராபர்ட் கிரான்ட், 1779ம் ஆண்டு இந்தியாவில் பிறந்தவர். இவரது தந்தை ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். அவர் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் அங்கத்தினராக இந்தியாவுக்கு வந்து, கம்பெனியின் வர்த்தக வாரியத்தின் (Board of Trade) செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். இந்தியாவில் ஏராளமான பணம் சம்பாதித்த பின், தனது சொந்த நாடாகிய ஸ்காட்லாண்டுக்குத் திரும்பினார்.

அங்கு சென்றபின் தனது புதல்வரான ராபர்ட் கிரான்ட் என்பவரைக் கேம்பிரிட்ஜ் நகரிலுள்ள மாக்டலீன் கல்லூரியில் கல்வி பயிலச் செய்தார், 1806’ல் ராபர்ட் கிரான்ட் சட்டக் கல்விப்பட்டம் பெற்று, மறு ஆண்டு முதல் வழக்கறிஞராகப் பணியாற்றினார். 1826ல் அவர் இங்கிலாந்திலுள்ள பாராளுமன்றத்தின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1834ல் அவர் ‘ஸர்’ என்னும் உயர்பட்டம் பெற்று, இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் கீழ், பம்பாய் மாகாணத்தின் கவர்னாரகப் பதவியேற்று, ஐந்து ஆண்டுகள் அப்பதவியில் இருந்தார். 1835’ல் அவர் எழுதிய பல பாடல்கள் புத்தக ரூபமாக வெளியிடப்பட்டன. அவர் எழுதிய எல்லாக் கவிகளும், மற்றும் பல இலக்கியங்களும், அவர் இறந்தபின், அவரது தமையனாரான கிரென்லக் பிரபுவால் வெளியிடப்பட்டன.

ஸர் ராபர்ட் கிரான்ட் மிகவும் உதாரகுணம் படைத்தவர். தர்ம காரியங்களுக்கு ஏராளமான பொருளுதவி செய்துவந்தார். பொதுமக்கள் அவரை வெகுவாகப் பாராட்டினார். அவர் கவர்னர் பதவியிலிருக்கும்போதே, 1838ம் ஆண்டு, ஜூலை மாதம், 9’ம் தேதி, தமது 59ம் வயதில் பம்பாய் நகரில் காலமானார். அவர் ஞாபகார்த்தமாக பம்பாயில் ஒரு மருத்துவக் கல்லூரி நிறுவப்பட்டிருக்கிறது.

# ஆராதனை மற்றும் நிகழ்வுகள்

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 3 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 5 | ஞாயிறு | 11.00 am – 1.00 pm | உபவாச ஜெபக்கூடுகை |
| 7 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 10 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 14 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 17 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 21 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 24 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 28 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 31 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய துதி ஆராதனை - St.Andrew's church |
| | | 11.45 pm – 12.00am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

# ஆராதனை மற்றும் நிகழ்வுகள்

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 2 | ஞாயிறு | 11.00 am – 1.00 pm | உபவாச ஜெபக்கூடுகை |
| 4 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 7 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 11 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 14 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 18 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 21 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 25 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 28 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 31 | திங்கள் | 11.45 pm – 12.00am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

# ஆராதனை பாடல்கள்

| 03-07-26 | |
|---|---|
| பாமாலை – 22 | தூய, தூய, தூயா! |
| பாமாலை – 249 | நல் மீட்பர் பட்சம் நில்லும் |
| கீர்த்தனை – 149& 156 | பரனே திருக்கடைக்கண்<br>ஐயையா, நான் வந்தேன் |
| பாமாலை – 35 | எங்கள் ஊக்க வேண்டல் கேளும் |
| 10-07-26 | |
| பாமாலை – 143 | வானமும் பூமியும் |
| பாமாலை – 347 | தெய்வ ஆட்டுக்குட்டியே |
| கீர்த்தனை – 187 & 267 | தந்தேன் என்னை இயேசுவே<br>மறவாதே, மனமே, - தேவ சுதனை |
| பாமாலை – 40 | மெய்ஜோதியாம் நல் மீட்பரே |
| 17-07-26 | |
| பாமாலை – 386 | சர்வத்தையும் அன்பாய் |
| பாமாலை – 200 | கர்த்தாவே பரஞ்சோதியால் |
| கீர்த்தனை – 91 & 17 | ராச ராச பிதா மைந்த<br>கண்களை ஏறெடுப்பேன் மாமேரு |
| கீர்த்தனை – 5 | சருவ லோகாதிபா, நமஸ்காரம் |
| 24-07-26 | |
| பாமாலை – 16 | ஆ கர்த்தாவே, தாழ்மையாக |
| பாமாலை – 361 | ஒப்பில்லாத தெய்வ அன்பே |
| கீர்த்தனை – 265 & 217 | பயந்து கர்த்தரின் பாதையதனில்<br>அன்பே பிரதானம், சகோதர |
| பாமாலை – 33 | இந்நாள்வரைக்கும் கர்த்தரே |
| 31-07-26 | |
| பாமாலை – 267 | போற்றும், போற்றும்! |
| பாமாலை – 326 | ரட்சா பெருமானே, பாரும் |
| கீர்த்தனை – 206 & 105 | ஜெப சிந்தை எனில் தாரும்<br>தேன் இனிமையிலும் ஏசுவின் |
| பாமாலை – 38 | நீர் தந்த நாளும் ஓய்ந்ததே |

*அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார். சங்கீதம் 34:4b*

# ஆராதனை பாடல்கள்

| | |
|---|---|
| **07-08-26** | |
| பாமாலை – 10 | போற்றிடு ஆன்மமே, சிஷ்டி |
| பாமாலை – 302 | என்தன் ஜீவன், இயேசுவே |
| கீர்த்தனை – 251 & 79 | ஞானஸ்நான மா ஞானத்திரவியமே<br>தோத்திரம் செய்வேனே, ரட்சகனை |
| கீர்த்தனை – 173 | வாரும் ஐயா, போதகரே |
| **14-08-26** | |
| பாமாலை – 3 | உன்னதம், ஆழம் எங்கேயும் |
| பாமாலை – 236 | வாழ்க, எம் தேசமே! |
| கீர்த்தனை – 255 & 106 | கர்த்தரின் பந்தியில் வா<br>ஒரு மருந்தரும் குருமருந்து |
| கீர்த்தனை – 334 | இமயமும் குமரியும் எல்லைகடலுடை |
| பாமாலை – 212 | பகலோன் கதிர் போலுமே |
| **21-08-26** | |
| பாமாலை – 1 | ஆத்மமே, உன் ஆண்டவரின் |
| பாமாலை – 264 | நல் மீட்பர் இயேசு நாமமே |
| கீர்த்தனை – 237 & 77 | தந்தானைத் துதிப்போமே<br>சீர் ஏசு நாதனுக்கு ஜெய மங்களம் |
| கீர்த்தனை – 322 | சூரியன் மறைந்து அந்தகாரம் |
| **28-08-26** | |
| பாமாலை – 18 | எங்கும் நிறைந்த தெய்வமே |
| பாமாலை – 45 | மகிழ்ச்சி ஓய்வுநாளே! |
| கீர்த்தனை – 197 & 75 | கிஞ்சிதமும் நெஞ்சே<br>இவரே பெருமான் மற்றப்பேர் |
| கீர்த்தனை – 2 | திரி முதல் கிருபாசனனே சரணம் |




| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 03-07-26 | நம் பணிகளில் கடவுளை கனப்படுத்துதல் | யாத். 31:1-11 | கொலோ. 3:22-25 | லூக்கா 17:7-10 | 104:31-33 |
| 10-07-26 | திருச்சபையை கற்றல் சமூகமாக மாற்றுதல் | நெகேமியா 8:1-12 | 1 கொரி. 14:20-23 | மத்தேயு 13:16-23 | 1 |
| 17-07-26 | மேன்மை பாராட்ட அல்ல, சேவை செய்ய அழைப்பு | எரேமியா 1:4-10 | 1 பேதுரு 5:1-4 | மத்தேயு 20:20-28 | 132 |
| 24-07-26 | ஒற்றுமையையும், நல்லுறவையும் கொண்டாடுதல் | பிரசங்கி 4:9-12 | எபேசியர் 5:21-33 | மத்தேயு 19:4-6 | 128 |
| 31-07-26 | கருணையுடன் செயல்படுதல் | ஏசாயா 58:6-10 | 1யோவான் 3:6-18 | மத்தேயு 9:35-38 | 82 |
| 07-08-26 | திருமுழுக்கினால் கிறிஸ்துவின் அடையாளப்படுத்துவதை வெளிப்படுத்துதல் | யோபு 12:7-12 | வெளி. 22:1-5 | லூக்கா 12:24-34 | 19 |
| 15-08-26 | ஒப்புறவின் மையம் | யாத். 24:3-11 | 1 கொரி. 10:14-22 | மத்தேயு 5:23-26 | 85 |
| 22-08-26 | ஒடுக்கப்பட்டவர்களுடன் பயணிக்கும் கடவுள் | உபா. 26:5-11 | பிலேமோன் 10 – 18 | யோவான் 4:5-14 | 146 |
| 29-08-26 | புலம்பெயர்ந்தோரையும் ஏற்றுக்கொள்ளுதல் | லேவி 19: 9-10,33,37 | எபேசியர் 2:11-22 | லூக்கா 10:25-37 | 146 |

# செவ்வாய் கிழமை — எரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 07-07-26 | நீதிமொழிகள் | 11:17-31 | Mussafah |
| 14-07-26 | நீதிமொழிகள் | 12:1-14 | Tourist Club |
| 21-07-26 | நீதிமொழிகள் | 12:15-28 | Al Wadha |
| 28-07-26 | நீதிமொழிகள் | 13:1-12 | Hamdan |
| 04-08-26 | நீதிமொழிகள் | 14:1-11 | Muroor |
| 11-08-26 | நீதிமொழிகள் | 14:12-24 | Mussafah |
| 18-08-26 | நீதிமொழிகள் | 14:25-35 | Tourist Club |
| 25-08-26 | நீதிமொழிகள் | 15:1-17 | Al Wadha |




## புதிய அங்கத்தினர்களின் சேர்க்கை விவரம்

| S.No. | Name | Mem. No. |
|---|---|---|
| 1 | Ms. Gayathri Pandurangan | 525 |

## புதிய நிர்வாகக் குழு

1. Mrs. E. Princy Catherine - Vice President
2. Mr. Y. Dinesh - Church Warden
3. Mr. Sunil Manuel Augustine - Church Warden
4. Mr. Ansel Regi
5. Mr. Anti Grapeson David
6. Mr. Arul Sugirson Samuel
7. Ms. Goldina Thatcher
8. Dr. Mrs. Jenila Labi Labence
9. Mr. Kishor Raj Samraj
10. Mr. Manuel Yesudian

(4–10: Members)

# HAPPY BIRTHDAY

## JULY

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Ms. | Catherine Jesintha |
| 1 | Ms. | Sharon |
| 1 | Mr. | Rev. Adoni Manuel |
| 2 | Mrs. | Jenis |
| 3 | Miss. | Joshita Glyn |
| 5 | Mr. | Kannan |
| 6 | Mrs. | Jesintha M |
| 6 | Mrs. | Helen Sharmila |
| 6 | Mr. | George Kirubaharan |
| 7 | Mr. | Julian Christian. D |
| 7 | Mrs. | Shajeetha Gracy |
| 7 | Mr. | Arthur Barnabas |
| 9 | Baby. | Joanna |
| 9 | Mrs. | Jessie Vasanth |
| 10 | Mr. | Jeya Seelan Gabriel |
| 10 | Dr.Mr. | Simon Nicolas. R |
| 10 | Master | Eric Jayden |
| 10 | Mr. | Gnanaraj Paulraj |
| 13 | Dr.Mr. | Roshan Sam Robert Rajesh |
| 14 | Ms. | Starlyne Noble |
| 14 | Baby | Austin Elroy Vigin |
| 14 | Ms. | Joanna Irene |
| 14 | Mr. | Jason Samuel J |
| 15 | Mrs. | Gayathri Pandurangan |
| 15 | Miss. | Jenica Pauline |

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 16 | Dr.Mr. | Benny Samuel. S |
| 16 | Mrs. | Annie Rosita |
| 16 | Master. | Jotham Berton. J |
| 16 | Master | Abishek Manuel |
| 16 | Mr. | Arun Jebastin Gnanaiah |
| 17 | Mr. | Jose Joseph Raj |
| 17 | Master | Darion Lemuel |
| 17 | Mr. | Samuel Jebaraj |
| 18 | Mr. | Jaison P |
| 18 | Mrs. | Masiha Starlin M.R. |
| 20 | Mrs. | Catherine Chris |
| 23 | Ms. | Adelyn Victoria Jeyaseelan |
| 24 | Mr. | David Crishanth Alexander |
| 24 | Mr. | Michael G |
| 25 | Ms. | Dafnie Marcia |
| 25 | Master | Theo Haral |
| 27 | Mrs. | Bebin Merri Joe |
| 28 | Mrs | Dheenal |
| 29 | Mr. | Nestor Ingarshal. J |
| 29 | Mrs. | Adela Sarah Victoria |
| 29 | Baby | Anna Natalie |
| 29 | Miss. | Jenessa |
| 29 | Mrs. | Alphyna Jeba Rajam |
| 30 | Mr. | Vijay Ananth D |
| 30 | Miss. | Shanita Glyn |
| 31 | Mr. | Milton D T |

# HAPPY BIRTHDAY

ஆலயப் பக்கம்

## AUGUST

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Baby | Rivqah Deby |
| 1 | Miss | M. Joanna Sharon |
| 1 | Master | M. Juan Samuel |
| 1 | Baby | Ryan Alam |
| 2 | Ms. | Catherine Amy Beulah |
| 5 | Ms. | Jeya Jehosheba Mahear |
| 6 | Baby. | Janessa |
| 6 | Baby | Jaylene Darina |
| 7 | Baby. | Jaylan Paul Jino |
| 7 | Miss. | Abigail Presley |
| 8 | Mrs. | Prabha Selva Shaji |
| 8 | Mrs. | Christina Santhakumari |
| 9 | Mrs. | Catherine Jean S |
| 9 | Ms. | Asil Nithania |
| 9 | Mr. | Jenit |
| 12 | Mr. | Abraham Jebas Raja |
| 12 | Master | Albern Shaan |
| 13 | Mr. | Rufus Patrick Bernard |
| 14 | Ms. | Athina Shirlyn J |
| 15 | Mrs | Abisha Grace. S |
| 15 | Mrs. | Anu Monisha Rajesh |
| 16 | Baby | Matthew Raikkonen John |
| 16 | Mrs. | Harismalaska |
| 17 | Ms. | Karen Tryphena |
| 17 | Baby. | Ashlyn Britney |
| 17 | Mr. | Daniel Abraham |
| 18 | Ms. | Ann Liya Vigin |
| 18 | Mrs. | Subi Mol R |
| 19 | Ms. | Stephany Jebarani Daniel |
| 20 | Mr. | Samuel Bhaskar W |
| 20 | Baby | Luke Jairus |
| 21 | Mrs. | Esther Angeline R |
| 22 | Baby | Breyson Shazil |
| 23 | Ms. | Larisha |
| 23 | Mr. | Gnanaraj Murugesan |
| 23 | Mr. | Jones Allen Sam |
| 24 | Mrs. | Grace Romona |
| 24 | Mrs. | Pavithra Govindhan |
| 26 | Mr. | Nelson Prabhu |
| 26 | Mr | Kishor Raj |
| 27 | Baby | Jenilin Jose Joseph Raj |
| 30 | Ms. | Gabrylla  Sherrien |
| 31 | Mrs. | Thukilaja |

| Wedding Date | Title | Name |
|---|---|---|
| **July** | | |
| 1 | Mrs. & Mr. | Jo Ernast D |
| 2 | Mrs. & Mr. | Nelson Prabhu |
| 2 | Mrs. & Mr. | Rajaguru Seker |
| 3 | Mrs. & Mr. | Asir Kanagaraj |
| 4 | Mrs. & Mr. | Charles Rajkumar |
| 4 | Mrs. & Mr. | Jaison P |
| 5 | Mrs. & Mr. | Prasanna Sekaran |
| 7 | Mrs. & Mr. | Selvin Samuel |
| 7 | Mrs. & Mr. | Anish Raja |
| 9 | Mrs. & Mr. | Kannan |
| 9 | Mrs. & Mr. | Abraham Jebas Raja |
| 9 | Mrs. & Mr. | Jeyakumar |
| 13 | Mrs. & Mr. | Nithin Sekhar |
| 14 | Mrs. & Mr. | Gnanaraj Paulraj |
| 14 | Mrs. & Mr. | Frank Santhosh Kumar |
| 24 | Mrs. & Mr. | Selvin Franklin N |
| **AUGUST** | | |
| 8 | Mrs. & Mr. | Milton D T |
| 18 | Mrs. & Mr. | John Praveen Emmanuel Samuel |
| 19 | Dr.Mrs. & Dr. | Rajakumar Manickam |
| 20 | Mrs. & Mr. | Selva Shaji |
| 22 | Mrs. & Mr. | Gunalan A |
| 23 | Mrs. & Mr. | Jason Samuel J |
| 25 | Mrs. & Mr. | Stalin Raghu |
| 29 | Mrs. & Mr. | Yesudian Nayagam Eban |
| 31 | Mrs. & Mr. | Bamish P. |


The grace of the
Lord Jesus Christ
and
the love of
God
and
the fellowship of
the Holy Spirit
be with you all.
2 Corinthians 13:14